**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

குடிநீர்த்திட்டம் - திருநெல்வேலி மாவட்டம் - மானூர் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் கீழ் திருவேங்கடம் ஊரகப்பேரூராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் - நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ3) துறை**

அரசாணை (நிலை) எண்.107 நாள் : 10.02.2004

படிக்க :

1) அரசாணை (நிலை) எண்.34, ந.நி.(ம) கு.வ. துறை, நாள்.8.5.2003
2) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண்.எப்.திருவேங்கடம்/உபொ./பி(ம)டி/நாள்.29.9.2003.

*********

ஆணை:
பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், திருவேங்கடம் ஊரகப் பேரூராட்சிக்கு ரூ.105.08 இலட்சம் அமைப்புச் செலவு மற்றும் 7.88 இலட்சம் ஆண்டுப் பராமரிப்புச் செலவில் மொத்தக் குடிநீர் ஒதுக்கீடு செய்து நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிட்டது.

2) பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், மேற்காணும் மொத்தக்குடிநீர் ஒதுக்கீட்டிலிருந்து திருவேங்கடம் ஊரக பேரூராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.40.00 இலட்சம் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.2.59 இலட்சம் எனவும் அத்துடன் தற்கால மக்கள் தொகையை கணக்கில் கொண்டு தனிநபர் திட்டச் செலவு ரூ.1974 எனவும், 1000 லிட்டருக்கு ஆகும் செலவு ரூ.20.00 எனவும் குறிப்பிட்டு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3) வாரியம், 17.9.2003 அன்று நடைபெற்ற வாரியக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எண்.2-12ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கக்கோரி அரசுக்கு பரிந்துரைசெய்யத் தீர்மானித்தது. மேலும் இத்திட்டத்திற்கான செலவினத்தை 100 சதவீத மான்யத்தில் தமிழக அரசின்

குறைந்தபட்சத் தேவைத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றவும் குழு பரிந்துரை செய்ய தீர்மானித்தது.

4)மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வைப்புத்தொகையாக வீட்டு உபகோயத்திற்கு ரூ.5000/- எனவும் வணிகத்திற்கு ரூ.10,000/- எனவும் மற்றும் மாதாந்திரகுடிநீர் கட்டணமாக ஒவ்வொரு வருடத்திற்கும் 5 சதவீதம் உயர்த்தி வீட்டு உபயோகத்திற்கு ரூ.65-100, வணிகத்திற்கு ரூ.130-200 எனவும் நிர்ணயம் செய்ய அரசுக்கு பரிந்துரைசெய்துள்ளார். திருவேங்கடம் ஊரகப் பேரூராட்சியும் மேற்காணும் வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டணத்தை நிர்ணயம் செய்ய தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அரசாணை (நிலை) எண்.82/ஊ.வ./ நாள்.20.3.97-ன்படி 1000 லிட்டர் குடிநீருக்கான செலவு ரூ.17/-க்குள் இருந்தால் வாரியமே ஒப்புதல் வழங்கலாம்.

5)தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து ஏற்றுக்கொள்கிறது. அதன்படி திருவேங்கடம் ஊரகபேரூராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.40.00 இலட்சம் எனவும் ஆண்டுப் பராமரிப்புச் செலவு ரூ.2.59 இலட்சம் எனவும் அத்துடன் 1000 லிட்டர் குடிநீருக்கான செலவு ரூ.20.00 எனவும் தற்கால மக்கள் தொகையை கணக்கில் கொண்டு தனிநபர் திட்டச் செலவுகடம் ஊரகபேரூராட்சியின் குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.40.00 இலட்சம் எனவும் ஆண்டுப் பராமரிப்புச் செலவு ரூ.2.59 இலட்சம் எனவும் அத்துடன் 1000 லிட்டர் குடிநீருக்கான செலவு ரூ.20.00 எனவும் தற்கால மக்கள் தொகையை கணக்கில் கொண்டு தனிநபர் திட்டச் செலவு ரூ.1974/- எனவும் நிர்வாக ஒப்புதல்வழங்கி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசு ஆணையிடுகிறது.

1.இத்திட்டத்தை தமிழக அரசின் குறைந்தபட்சத் தேவைத்திட்டத்தின் கீழ் 100 சதவிகித மான்யம் பெற்று செயல்படுத்தப்படவேண்டும்.

2.திருவேங்கடம் ஊரகப் பேரூராட்சி, பேரூராட்சி மன்றத் தீர்மானஎண்.196, நாள்.8.12.2003-ல் நிர்ணயம் செய்துள்ளபடி இத்திட்டத்தின் பயனீட்டாளர் களிடமிருந்து வைப்புத்தொகையாக வீட்டு உபகோயத்திற்கு ரூ.5000/- எனவும் வணிகத்திற்கு ரூ.10,000/- எனவும், மாதாந்திர குடிநீர் கட்டணமாக ஒவ்வொரு வருடத்திற்கும் 5 சதவிகித உயர்வு என்ற அடிப்படையில் வீட்டு உபயோகத்திற்கு ரூ.65-100 எனவும், வணிகத்திற்கு ரூ.130-200 எனவும் வசூலிக்கப்படவேண்டும்.

3.இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி வேறு எந்தத் திட்டத்திற்கும் செலவிடப்படக்கூடாது.

4.இத்திட்டத்தின் இறுதி அறிக்கை மற்றும் பயனீட்டுச்சான்று ஆகியவற்றை உரியநேரத்தில் அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

6)இவ்வாணை நிதித்துறையின் அலுவலல் சார்பற்ற எண்.12/சி.செ.(எல்கே/04, நாள்.12.1.2004 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.என்.விஜயராகவன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர் :
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை-108.
இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-15
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநேல்வேலி மாவட்டம்.
மாநில கணக்காய்வாளர், சென்னை-18
மாநில கணக்காய்வாளர், சென்னை-18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காய்வாளர், சென்னை-35
மாநில கணக்காய்வாளர், சென்னை-35 (பெயரிட்ட உறையில்)
நகல் : முதுநிலை நேர்முக உதவியாளர்.
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9
ந.நி.(ம) கு.வ. (குவ.1, 2, 4 பேரூ.3) துறை, சென்னை-9
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.